3. தகவல் கோரல்

'மக்கள் குரல்' நாளிதழ் பறிமுதல் செய்யப்பட்டதா என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI: I would like to know whether any newspaper, particularly 'Makkal Kural' was seized yesterday.

MR. DEPUTY SPEAKER: That information should be given to the House. It is for the Government to say whether that particular paper was seized yesterday or not. If the Government so pleases, they may furnish the information to the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவசர நிலைக்குப் பிறகு தமிழகத்திலே சில பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 'மக்கள் குரல்' பத்திரிகை மாத்திரமல்ல—ஆளும் கட்சிச் சார்புடைய பத்திரிகைகள்கூட பல நேரங்களில் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 'முரசொலி' பத்திரிகைகூட பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆட்சேபகரமான செய்திகள் இருந்தால் பறிமுதல் செய்யப்படுகிறது. அவைகளிலே 'மக்கள் குரல்' பத்திரிகையும் ஒன்று.

DR. H. V. HANDE: Sir, whenever a question is raised, a clear answer should be given. Now I want to know whether the State Government are exercising the emergency powers ......

MR. DEPUTY SPEAKER: The Government have already answered this question. We should not go further into the matter.

(4) அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/75) 24—10—1975 ஆம் நாளன்று சட்ட மன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1975 அக்டோபர் 28

மேலும் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், 24—10—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு திருத்தம் ஏதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்ட தாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/75);

2. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/75);

3. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு ஹோமியோபதி முறை மருத்துவம்—ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/75);

4. தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/75);

5. 1975 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துப் பணியா ளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/75);

(5) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட அபி விருத்தி மன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.